*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை - 4*
*22 11 2025 SATURDAY 6 45 AM*
*வணக்கம் - மாநில செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

1. நாட்டில் உள்ள பல்வேறு இடங்களின் கலாச்சார நுணுக்கங்களை மக்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2. நாட்டின் வளர்ச்சிக்கு நம்பகமான - உயர்தரமான தரவுகள் மிகவும் அவசியம் என்று குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

3. மத்திய அரசு உருவாக்கியுள்ள நான்கு சட்டங்கள், தொழிலாளர் சட்ட வரலாற்றில் மிகப் பெரிய சீர்திருத்தம் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

4. மீனவர்களின் நலனுக்காக கடந்த நான்காண்டுகளில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

5. இந்தியா-தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி, இன்று குவஹாத்தியில் தொடங்குகிறது.

>>>>>><<<<<<<

நாட்டில் உள்ள பல்வேறு இடங்களின் கலாச்சார நுணுக்கங்களை மக்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

செகந்திராபாத் அருகே உள்ள Bollaram-ல் நேற்று பாரதீய கலா மஹோத்சவத்தை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

நாட்டின் கலாச்சார பன்முகத் தன்மை குறித்து இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த மத்திய அரசு மேற்கொண்டு வரும் பல்வேறு நடவடிக்கைகளை அவர் நினைவுகூர்ந்தார்.

பாரதீய கலா மஹோத்சவம் போன்ற நிகழ்ச்சிகள், நாட்டின் கலாச்சார பன்முகத் தன்மையை மேலும் ஆழமாக அறிந்து கொள்ள உதவும் என்றும் குடியரசுத்தலைவர் குறிப்பிட்டார்.

இந்த கலாச்சார நிகழ்ச்சியில் குஜராத், மஹாராஷ்ட்ரா, ராஜஸ்தான், கோவா ஆகிய யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த கலைஞர்கள் பங்கேற்றுள்ளனர்.

>>>>>><<<<<<

சிறந்த நிர்வாகம், கொள்கை உருவாக்கம் மற்றும் நாட்டின் வளர்ச்சிக்கு நம்பகமான - உயர்தரமான தரவுகள் மிகவும் அவசியம் என்று குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறை இணையமைச்சர் திரு. ராவ் இந்தர்ஜித் சிங் நேற்று குடியரசு துணைத்தலைவரை சந்தித்து பேசினார்.

அமைச்சகத்தின் முன்முயற்சிகள் மற்றும் சாதனைகள் குறித்து அவரிடம் விளக்கினார்.

அப்போது பேசிய திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், மத்திய அமைச்சகங்கள் மற்றும் மாநில அரசுகளுடன் இணைந்து கொள்கை கட்டமைப்புகளை வலுப்படுத்துவதிலும், திட்டங்களை வடிவமைத்து அவற்றை செயல்படுத்துவதிலும் நித்தி ஆயோக் ஆற்றிவரும் பங்கை பாராட்டினார்.

குறிப்பாக, வளர்ந்து வரும் மாவட்டங்கள் போன்ற முதன்மை திட்டங்களின் முக்கியத்துவத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

>>>>>><<<<<<

மத்திய அரசு உருவாக்கியுள்ள நான்கு சட்டங்கள், தொழிலாளர் சட்ட வரலாற்றில் மிகப் பெரிய சீர்திருத்தம் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

நாடுமுழுவதும் புதிய தொழிலாளர் சட்டத் தொகுப்புகள் அமல்படுத்தப்பட்டுள்ளதை சமூகவலைதளத்தில் குறிப்பிட்டுள்ள அவர், இந்த சட்டங்கள் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் மற்றும் சமூக பாதுகாப்பை உறுதி செய்வதாக குறிப்பிட்டுள்ளார்.

பெண் தொழிலாளர்களுக்கு சமவாய்ப்புகள் வழங்கப்படுவதாகவும், உணவு விநியோக பணியாளர்கள் மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு இந்த புதிய சட்டத் தொகுப்பால், சட்டபூர்வ அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய சட்டங்கள் தொழிலாளர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதோடு, உலகிற்கே முன்மாதிரியாக இருக்கும் என்றும் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

மாநிலத்தில் கடல் அரிப்பு பாதிப்பை தடுப்பதற்காக தூண்டில் வளைவுகள் அமைக்கப்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

உலக மீனவர் தினத்தை முன்னிட்டு, நேற்று கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக அவர் பேசுகையில் இதனை தெரிவித்தார்.

கடந்த ஐந்தாண்டுகளில் மீனவர்களின் கோரிக்கையை ஏற்று, மீன்பிடி தடைக்கால நிவாரணம் 5 ஆயிரம் ரூபாயிலிருந்து 8 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

மீனவர்களுக்கான வீடு கட்டும் திட்டத்தின் கீழ், பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

மீன்பிடி தொழிலுக்கான கூட்டுறவுக் கடன், நாட்டுப் படகு மீனவர்களுக்கு 40 சதவீத மானியத்தில் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் இதுவரை 4 லட்சத்து 81 ஆயிரத்து 284 மாற்றுத்திறனாளி வாக்காளர்களும், 9 ஆயிரத்து 464 திருநங்கை வாக்காளர்களும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்

*இதுகுறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில். வாக்காளர்களுக்கு சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அதிகாரிகள் மூலமாக கணக்கீட்டுப் படிவங்கள் வழங்கப்பட்டதோடு அவற்றை நிரப்பவும் தேவையான உதவிகள் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியின் போது, மூத்த குடிமக்கள் மற்றும் நோயாளிகள் உள்ளிட்டோருக்கு தேவையான உதவிகளை செய்து தருமாறு தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<<*

*சர்தார் வல்லபாய் பட்டேலின் 150வது பிறந்த நாள், நாடுமுழுவதும் தொடர்ந்து கொண்டாடப்பட்டு வருகிறது.*

*இதையொட்டி, நெல்லை மாவட்டம், பாளையங்கோட்டையில் நேரு யுவகேந்திரா சார்பில் ஒற்றுமை பேரணி நேற்று நடைபெற்றது.*

*இளைஞர்களிடம் தேசப்பற்றை உருவாக்குவதற்காக இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டதாக நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழக நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. வெளியப்பன் தெரிவித்தார்.*

*>>>>>><<<<<<*

*நாகை மாவட்டம், நாகூர் தர்காவின் 469வது ஆண்டு கந்தூரி விழா கொடியேற்றத்துடன் நேற்று தொடங்கியது.*

*இந்த நிகழ்ச்சியில் தமிழகம் மற்றும் அண்டை மாநிலங்களைச் சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் – செல்வன் ஜெபராஜ் 44 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<<*

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடியுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர் ஆகிய மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும். நகரின் ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

>>>>>><<<<<<

இருவரிச் செய்திகள்

ஆப்கானிஸ்தானில் நேற்று நேரிட்ட நிலநடுக்கத்தில் ஏராளமான வீடுகள் சேதமடைந்தன.

>>>>>><<<<<<

இந்தியா வந்துள்ள 40 பேர் கொண்ட பிரேஸில் கடற்படை பிரதிநிதிகள் குழு, புதுதில்லியில் நேற்று இந்திய கடற்படை அதிகாரிகளை சந்தித்து பேசியது.

>>>>>><<<<<<

இந்திய கடலோர காவல்படையின் சார்பில் மஹாராஷ்ட்ரா மற்றும் கோவா கடலோரப் பகுதியில் இன்று கடலோர பாதுகாப்பு ஒத்திகை நடைபெறவுள்ளது.

>>>>>><<<<<<

சாலைகளில் பேருந்துகளுக்கு முன்னுரிமை அளிக்கும் பிரச்சாரத்தை துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் சென்னையில் நேற்று தொடங்கி வைத்தார்

>>>>>><<<<<<

தருமபுரி மாவட்டத்தில் தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கத்தின் சார்பில் ஊட்டமிகு சிறுதானிய உணவுத் திருவிழா நேற்று நடைபெற்றது.

>>>>>><<<<<<

*கடல்பசுக்களின் பாதுகாப்பை வலியுறுத்தும் அஞ்சல் அட்டைகள் நேற்று திருச்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வெளியிடப்பட்டது.*

>>>>>><<<<<<

*திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள புதிய பூங்காவை ஆட்சியர் திரு. பிரதாப் நேற்று திறந்து வைத்தார்.*

>>>>>><<<<<<

*நீலகிரி மாவட்டம், கூடலூர், பந்தலூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பழங்குடியின மக்களிடையே போதைப் பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்ச்சியை நேற்று காவல்துறை நடத்தியது.*

>>>>>><<<<<<

*நவீன வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்டுள்ள சென்னை, அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்து நிலையம். நாளை மறுநாள் மக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.*

>>>>>><<<<<<

*விளையாட்டுச் செய்திகள்*

*இந்தியா-தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி, இன்று குவஹாத்தியில் தொடங்குகிறது.*

*ஏற்கனவே கொல்கத்தாவில் நடைபெற்ற முதல் போட்டியில், தென்னாப்பிரிக்கா வெற்றிபெற்று 1-0 என்ற புள்ளிக்கணக்கில் முன்னணியில் உள்ளது.*

>>>>>><<<<<<

*17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கால்பந்து தகுதிச் சுற்றுப் போட்டி இன்று அஹமதாபாதில் தொடங்குகிறது.*

*இன்றிரவு மணி 7.30-க்கு நடைபெறும் இப்போட்டியில் இந்தியா – பாலஸ்தீன அணியை எதிர்கொள்கிறது.*

>>>>><<<<<<